# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2087/89 - 2018 සැප්තැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2018.09.07

**2087/89 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39(1) ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கற் கட்டளையை இரத்துச் செய்தல்*

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் அட்டவணை பிறப்பிக்கப்பட்டு 2017, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 2049/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2017 ஆம் ஆண்டின் 322 ஆம் இலக்கக் கட்டளையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

எனினும், அக்காணித் துண்டுகளின் உடைமை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை எனவே, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், 2017, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 2049/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2017 ஆம் ஆண்டின் 322 ஆம் இலக்கக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4 - 3/15/2017/வீசு/314.
பிர. செய. குறிப்பு இல. : கேயூடீஎஸ்/எல்என்டீ/01/ஏசிகிவ்/31.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2018, யூலை 22.

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், குருவிட்ட கோரளை - வட உடபத்துவை சிறு பிரிவில், இஹல பொஹொரபாவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.10.31 ஆந் திகதிய ஆர்/கேஆர்டபிள்யூ/2017/685 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு ஏ, பீ எனக் காட்டப்பட்டுள்ள இரண்டு (2) காணித் துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு 'ஏ' - புஸ்ஸெல்லவத்த - விஸ்தீரணம்: 0.1672 ஹெக்டயார்**

வடக்கு, கிழக்கு : உரிமை கோருபவர் தெரியாத பன்சல்வத்த ; தெற்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் வீதி (வீ. அ. அ.) ; மேற்கு: வீதி (வீ. அ. அ.) மற்றும் உரிமை கோருவோர் தெரியாத பன்சல்வத்த.

**02. துண்டு 'பீ' - புஸ்ஸெல்லவத்த - விஸ்தீரணம்: 1.9250 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (பிரதேச சபை), டபிள்யூ. சுவர்ணலதா உரிமை கோரும் நுங்கஹேன்யாய அல்லது ஜம்புகஹஹேன மற்றும் புஸ்ஸெல்ல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் புஸ்ஸெல்லவத்த ; கிழக்கு : டபிள்யூ. சுவர்ணலதா உரிமை கோரும் நுங்கஹேன்யாய அல்லது ஜம்புகஹஹேன மற்றும் புஸ்ஸெல்ல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் புஸ்ஸெல்லவத்த ; தெற்கு : வீதி, புஸ்ஸெல்ல பெருந்தோட்டக் கம்பனியும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை உரிமை கோரும் புஸ்ஸெல்லவத்த மற்றும் வீதி (வீ. அ. அ.) ; மேற்கு: புஸ்ஸெல்ல பெருந்தோட்டக் கம்பனி, கைத்தொழில் அபிவிருத்திச் சபை உரிமை கோரும் புஸ்ஸெல்லவத்த மற்றும் வீதி (வீ. அ. அ.).

9 - 618


1A – G28477 – 12 (2018/09)    இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.